**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,

TIRUVANNAMALAI.

IDOP .No. 44/2020 PW2

01.02.2024– **வா.சா.2 திருமதி. ராயம்மாள் சத்திய வாக்குமூலத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனது நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ஜான்சிராணியை தெரியும். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் ஆன தேதி தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் நங்காத்தூரில் நடந்தது. எனது நிருபண வாக்குமூலத்தில் மனுதாரரின் தாயாருக்கு உணவு அளிக்க முடியாது என்றும், எங்காவது போய் தொலைந்தால் தான் என் பிரச்சனைகள் தீரும் என எதிர்மனுதாரர் சொல்லியுள்ளது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வேட்டவலம் காவல் நிலையத்தில் மனுதாரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது என நிருபிக்க ஆதாரம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரரின் தாயாருக்கு எதிர்மனுதாரர் சாப்பாடு போடவில்லை என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் எனக்கு நேரடியாக தெரியும். எனக்கும் மனுதாரருக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றால் இல்லை. மனுதாரர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் வெகு தொலைவு என்றும், நான் ஒரு நாளும் மனுதாரர் வீட்டிற்கு சென்றதில்லை என்றால் சரியல்ல.

**/உண்மை நகல்/**

ஒப்பம்/–P.மதுசூதனன்,

முதன்மை மாவட்ட நீதிபதி,